5. கவன ஈர்ப்பு

(அ) வையம்பட்டி ஒன்றியப் பகுதியிலும் பெரியார் மூலனூர் பகுதியிலும் நோய்களால் ஆடுகள் மடிதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் செம்மறி மற்று வெள்ளாடுகளுக்கு குலை அடைப்பான் நோய் கண்டு ஆடுகள் மடிந்து வருவது மற்றும் பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், மூலனூர் பகுதியில் அம்மை நோயினால் செம்மறி ஆடுகள் மடிந்து வருவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

திருச்சிராப்பள்ளி மாவட்டம் வையம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் குலை அடைப்பான் நோய்

திருச்சி மாவட்டம், வையம்பட்டி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த குமாரவாடி, நத்தம்புதூர் ஆகிய ஊர்களில் 8-3-1995 அன்று மூன்று செம்மறி ஆடுகள் அடைப்பான் நோயினால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டது. அதுவும் தவிர அடைப்பான் நோயினால் பாதிக்கப்பட்ட 4 ஆடுகளை (9-3-1995) அன்றே திருச்சி உதவி இயக்குநரும், வையம்பட்டி கால்நடை மருந்தகத்தைச் சேர்ந்த கால்நடை உதவி மருத்துவரும் நேரடியாக பார்வையிட்டு தக்க சிகிச்சை அளிக்கப்பட்டு அந்த ஆடுகள் தற்போது நல்ல நிலையில் உள்ளன. இந்த அடைப்பான் நோய் மற்ற ஆடுகளுக்கும் பரவும் என்ற காரணத்தினால் அந்த

கிராமங்களில் உள்ள 450 செம்மறி ஆடுகளுக்கும் 140 வெள்ளாடுகளுக்கும் அடைப்பான் நோய்க்கு எதிராக தடுப்பூசி 10-3-1995 அன்று போடப்பட்டுள்ளது. தற்போது நோய் கட்டுப்பாட்டில் உள்ளது. தற்போது இறப்பு ஏதும் இல்லை.

பெரியார் மாவட்டம், மூலனூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் ஆட்டம்மை நோய்

பெரியார் மாவட்டம், மூலனூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த போளூரை, சின்னதாம்பட்டி, கணபதிபாளையம், வள்ளவாவிபுதூர், மேட்டுவலசு மற்றும் எலந்தை மடைபுதூர் ஆகிய கிராமங்களில் 5-2-1995 அன்று 30 ஆடுகளுக்கு ஆட்டம்மை நோய் பாதிக்கப்பட்டு 15 ஆடுகள் இறந்துவிட்டன. மூலனூர் யூனியனைச் சேர்ந்த கிராமங்களில் உள்ள 2239 ஆடுகளில் 2086 ஆடுகளுக்கு தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சுற்றியுள்ள கிராமங்களில் 1314 ஆடுகளுக்கு தடுப்பூசி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது நோய் கட்டுப்பாட்டில் உள்ளது. இறப்பு ஏதும் இல்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடு வளர்ப்பு விவசாயப் பெருமக்களுக்கு லாபகரமான ஒரு உப தொழிலாகும். ஆடுகள் கிராமப்புறங்களில் நடமாடும் வங்கிகளாகத் திகழ்கின்றன. வெள்ளாடுகள் ஏழைகளினுடைய பசுக்களாகவும், ஒரு இயற்கை உரத் தொழிற்சாலையாகவும் விளங்குகின்றன. இவ்வாறு கிராமப் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் ஆடுகளை கடந்த 10 ஆண்டுகளாக 'Blue tongue' என்ற நீலநாக்கு நோய் என்ற நச்சு நோய் கிராமங்களில் ஏற்பட்டு, முக்கிய வைரஸ் நோயால் வாய்ப்புண், நாக்கு நீலநிறம், அம்மை நோய், குலை அடைப்பான், மூக்கில் புண், சளி ஒழுகுதல் போன்றவை ஏற்பட்டு ஆடுகள் பெருமளவில் மடிந்து விடுகின்றன. இந்த நோயின் முதல் தாக்குதலில், அநேகமாக பாதிக்கப்பட்ட ஆடுகள் பிழைப்பதில்லை. தாக்குதலின் வீரியம் குறைந்து, பின்பு நோயின் தாக்குதலுக்குள்ளாகும் ஆடுகள்தான். Secondary Symptomatic treatment மூலம் பிழைக்கின்றன. அடைப்பான், தட்டம்மை வியாதிகளின் வீரியம் குறைந்த நிலையில் 'Blue tongue' என்ற கொடிய வியாதி சில ஆண்டுகளில் மிகப் பெரிய எண்ணிக்கையில் ஆடுகளை பழி வாங்கிக் கொண்டு இருக்கின்றன. ஆண்டுதோறும் இந்தப் பாதிப்பு, ஆகஸ்ட் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை திருச்சி, பெரியார் மாவட்டங்களில் அதிமாகவும், குறிப்பாக தென் மாவட்டங்களில் பரவலாகவும், மற்றும் அனைத்துப் பகுதிகளிலும் ஏற்படுகின்றது. இந்த ஆண்டும் மேற்கண்ட மாவட்டங்களில்,

மழை பெய்யும் நேரங்களில் பெருமளவில் ஆடுகள் மடிந்து விட்டன. இந்த நோய்க்கு இன்னும் தடுப்பு ஊசி கண்டுபிடிக்கப்படவில்லை; கண்டுபிடிக்க முயற்சிகள்தான் எடுக்கப்பட்டு வருகின்றன..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி மரியம் உல் ஆசியா, எந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது கேள்வி கேட்கச் சொன்னாலும், நீங்கள் ஒரு பெரிய பிரச்சாரமே செய்கிறீர்கள். (குறுக்கீடு) எப்போதுமே, இப்படியே வைத்துக்கொள்ளக் கூடாது. கேள்வியாகக் கேட்க வேண்டுமென்று உங்களுக்கு நான் பலமுறை சொல்லி இருக்கிறேன், கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: நீல நாக்கு என்ற கொடிய நோய்க்கு தடுப்பு ஊசி கண்டுபிடிக்க விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் வையம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் குலை அடைப்பான் நோயினால் 3 செம்மறி ஆடுகள் இறந்து இருக்கின்றன. 4 ஆடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. அதைத் தடுக்க, 450 செம்மறி ஆடுகளுக்கும், 140 வெள்ளாடுகளுக்கும் அடைப்பான் நோய் தடுப்பு ஊசி 10 ஆம் தேதி போடப்பட்டு, இப்போது ஆடுகள் எல்லாம் பாதுகாக்கப் படுகின்றன. அதேபோன்று பெரியார் மாவட்டத்திலும் தடுப்பு ஊசி போடப்பட்டு ஆடுகள் பாதுகாக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல 'Blue tongue' என்ற நோயினால் பாதிக்கப்படுகிற ஆடுகளுக்காக மருந்து இதுவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதற்காக தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் நடப்பு ஆண்டில் நிதியை அதிகமாக ஒதுக்கீடு தந்து, இராணிப்பேட்டை நோய் தடுப்பு மருத்துவமனை வாயிலாகவும், மற்றும் பல்கலைக் கழகத்தின் வாயிலாகவும், ஆராய்ச்சிக் கூடங்கள் வாயிலாகவும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆராய்ச்சியை செய்வதற்காக ஒரு வல்லுநர் குழுவை அமைத்து அதன் வாயிலாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த பட்ஜெட் செஸன் முடிந்தவுடன் உடனடியாக அதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு ஒரு ஆலோசனைக் கூட்டம் போடப்படும். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கலாம் என்று கூறி இதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.